செ.வெ.எண்.609 நாள்.28.11.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**செங்கல்பட்டு,மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 51 பள்ளிகளைச் சேர்ந்த 9794 மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.**

**************

செங்கல்பட்டு வட்டம், சிங்கபெருமாள் கோயில் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 7 மேல்நிலைப்பள்ளி மாணவ/மாணவிகளுக்கு 1828 விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் வழங்கினார். மடிக்கணினிகளை வழங்கி பேசிய மாண்புமிகு அமைச்சர்,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் மாணவ/மாணவிகளிடையே கல்விப் புரட்சியை உண்டாக்கிய திட்டம் தான் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டமாகும். முன்பெல்லாம் பள்ளியில் படிக்கும் போது அடுத்த வகுப்பிற்கு தேர்ச்சி பெற்றபின் அந்த வகுப்பில் படித்த பழைய மாணவர்களின் புத்தங்களை வாங்கி படித்த காலம் தற்போது அந்த நிலை இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவர்கள் கல்வி கற்பதில் எந்த சிரமமும் இருக்ககூடாது என்பதை கருத்தில் கொண்டு 14 வகையான திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார். பொருளாதார நிலையை காரணமாக மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில்வதில் இடைநிற்றல் தவிர்க்கும் வகையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப்பள்ளிகளிலும், அனைத்து கட்டமைப்பு வசதிகளும் உள்ளிட்ட அனைத்து வசதிகளைப் பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் தேர்ச்சி சதவீதமும் அரசுப்பள்ளிகளில் அதிகரித்து வருகிறது. கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் திறமைமிக்க ஆசிரியர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் பணியை புனிதமானதாக கருதி பணியாற்றுவதாலும் அரசும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளிலும் எந்தவித தடையின்றி கல்வி கற்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்துவதாலும் மாணவர்கள் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். மாணவர்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தான் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் 5ல் ஒருபங்கு பள்ளிகல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வியறிவு முன்னேற்றத்திற்கு மடிக்கணினி முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர்கள் பல உலக சம்பவங்களை இருந்த இடத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. பணம் படைத்த குடும்பத்தை சார்ந்தவர்கள் மட்டுமின்றி ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும் கல்வியறிவு பெறுவதில் சிரமம் இருக்கக்கூடாது என்பதனால்தான் மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த சீரிய சிறப்பு மிக்க திட்டத்தை செயல்படுத்தி கல்விப்புரட்சியை ஏற்படுத்தியுள்ளார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளக்க வேண்டுவது மட்டுமின்றி ஒழுக்கமிக்க வகையில் ஆசிரியர்களிடத்தில் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட காரணத்தினால்தான் ஆசிரியர்கள் சில நேரத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்கின்றனர். நான் அமைச்சராக இன்று உயர்ந்து நிற்பதற்கு காரணம் நான் என்னுடைய ஆசிரியர்களிடத்தில் இன்றளவும் பயபக்தியுடன் மரியாதையுடன் நடந்து கொண்டு வருவதுதான் காரணம். மேலும் மாணவர்கள் எதிர்கால குறிக்கோளை மனதில் வைத்து இலட்சிய உணர்வோடு செயல்பட்டு சிறந்த கல்வி அறிவை பெற்று முன்னேற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது,

மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த முத்தான திட்டங்களில் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் முக்கிய திட்டமாகும். விலையில்லா மடிக்கணினி மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் அதிகரிக்க ஆசிரியர்கள் முழு முனைப்புடன் செயல்பட வேண்டும். ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் கல்வியை மாணவர்கள் ஒழுங்காக பயின்று கல்வி அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் போல் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மாணவர்களின் கல்வியறிவை பெறுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் மாணவர்களை நல்ல நிலையில் முன்னேற்றம் அடைய செய்ய முடியும் என தெரிவித்தார்.

பின்னர், செங்கல்பட்டில் 8 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், திருக்கழுக்குன்றத்தில் 9 அரசு மகளிர் மற்றும் ஆண் மேல்நிலைப் பள்ளிகளுக்கும்,திருப்போரூரில் 9 அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், மதுராந்தகத்தில் 14 அரசு (மகளிர் ) மேல்நிலைப் பள்ளிகளுக்கும், செய்யூரில் 4 அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 51 பள்ளிகளில் பயிலும் 9794 மாணவ/மாணவியர்களுக்கு அமைச்சர் அவர்கள் விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகதம் குமரவேல், செங்கல்பட்டு சார் ஆட்சியர் திரு.வி.பி.ஜெயசீலன் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.புகழேந்தி, டாக்டர்.ஆர்.டி.அரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தண்டரை மனோகரன், திரு.தனபால், செய்யூர் திரு.ராஜு, மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம், முதன்மை கல்வி அலுவலர் திரு.ர.திருவளர்செல்வி, மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.தமிழரசி, தலைமை ஆசிரியர்கள் , மாணவ/மாணவியர்கள் திரளாக பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.**